# தீர்க்கதரிசி இருதயத்தை அறிகிறான்

1

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

தேவன் இஸ்ரவேல் தேசத்திற்கு தெய்வீக மண்டலத்தின் (Divine realm) வழியாக உதவி செய்ய வல்லமையுடையவராய் இருந்தது போல, அமெரிக்க ஜனங்களாகிய நாம் மீண்டும் தேவனிடம் திரும்பினால், தேவன் அமெரிக்க ஜனங்களாகிய நமக்கும் உதவி செய்வார்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: எங்கள் நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது

# (OUR HOPE IS IN GOD)

சனிக்கிழமை மாலை, செப்டம்பர் 29, 1951, செயின்ட் நிக்கோலாஸ் அரங்கம், நியூயார்க், அமெரிக்கா

(2 இராஜா. 6:8-12)

**அக்காலத்தில் சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணி, இன்ன இன்ன ஸ்தலத்திலே பாளயமிறங்குவேன் என்று தன் ஊழியக்காரரோடே ஆலோசனை பண்ணினான்.**

**ஆகிலும் தேவனுடைய மனுஷன் இஸ்ரவேலின் இராஜாவினிடத்தில் ஆள் அனுப்பி: இன்ன இடத்துக்குப்**

போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும்; சீரியர் அங்கே இறங்குவார்கள் என்று சொல்லச் சொன்னான்.

அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா தேவனுடைய மனுஷன் தன்னை எச்சரித்து, தனக்குக் குறித்து சொன்ன ஸ்தலத்திற்கு மனுஷரை அனுப்பிப்பார்த்து எச்சரிக்கையாயிருந்து, இப்படி அநேகந்தரம் தன்னைக் காத்துக்கொண்டான்.

இந்தக் காரியத்தினிமித்தம் சீரிய ராஜாவின் இருதயம் குழம்பி, அவன் தன் ஊழியக்காரரை அழைத்து: நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார்

**என்று நீங்கள் எனக்கு அறிவிக்கமாட்டீர்களா என்று கேட்டான்.**

**அப்பொழுது அவன் ஊழியக்காரரில் ஒருவன்: அப்படியில்லை; என் ஆண்டவனாகிய ராஜாவே, நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்றான்.**

---

15. அந்த தீர்க்கதரிசியாகிய எலிசா எப்படியாக... சீரியாவின் இராஜா இஸ்ரவேலுடன் யுத்தத்தை கூறுவித்தான், அவர்களுக்கிடையே பகைமை இருந்தது, ஏன், தீர்க்கதரிசியாகிய எலிசா

தன்னுடைய வீட்டில் உட்கார்ந்திருந்தான். சத்துரு என்ன செய்யப் போகிறான் என்பதை அவன் கண்டான்.



எனவே அவன் இஸ்ரவேலின் ராஜாவிடம் சென்று சீரியாவின் ராஜா பதுங்கியிருக்கும் இடத்தை அவனிடம் கூறி, வெளியே அவர்களிடம் வந்து, அவர்கள் வரும்போது அவர்களை பதுங்கி நின்று தாக்கும்படிக்கும் அவனிடம் கூறினான்.







இஸ்ரவேலின் ராஜா அங்கு (மனுஷரை) அனுப்பி தீர்க்கதரிசியாகிய எலிசா தன்னிடம் கூறியிருந்தபடியே இருக்கக் கண்டான்.

**தேவன் இஸ்ரவேல் தேசத்திற்கு தெய்வீக மண்டலத்தின் (Divine realm) வழியாக உதவி செய்ய வல்லமையுடையவராய் இருந்தது போல, அமெரிக்க ஜனங்களாகிய**

நாம் மீண்டும் தேவனிடம் திரும்பினால், தேவன் அமெரிக்க ஜனங்களாகிய நமக்கும் உதவி செய்வார்.



தேவனால் இன்றிரவும் தெய்வீக மண்டலத்தின் வழியாக இந்த எல்லாவற்றிலுமிருந்தும் அமெரிக்காவுக்கு உதவி செய்ய முடியும்.

நாம் தேவனிடத்தில் வைத்திருக்கும் நம்முடைய ஒரே நம்பிக்கை

**அதுதான். இன்றிரவு நம்முடைய நம்பிக்கையானது அணுகுண்டில் அல்ல.**

**இன்றிரவு நம்முடைய நம்பிக்கையானது இயேசு கிறிஸ்துவில் உள்ளது. கிறிஸ்துவே பதிலாக இருக்கிறார்.**

16. டோக்கியோவில் அந்த மதகுரு, இன்னும் சரியாக கூறினால் ஜப்பானில் உள்ள டோக்கியோவில் அவர் நின்று கொண்டிருந்தார். யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது, நண்பரான சமயகுரு அங்கே நின்று கொண்டிருந்து, அவர் தன்னுடைய கரங்களை மேலே உயர்த்தி, “தேவனே, (ஒரு சித்தரவதை கூடத்தில்) நான் இவ்விடத்தினின்று உம்மை சந்திக்க வீட்டிற்கு வருவேன் என்று நான் யூகிக்கிறேன். நான் இன்னும் ஒருமுறை

என் மனைவியையும் குழந்தைகளையும் சந்திக்க விரும்புகிறேன், ஆனால் அப்படியிருந்தும் கர்த்தாவே, நான் இங்கிருந்து வீட்டிற்கு செல்ல நீர் விரும்பினால், நான் போக ஆயத்தமாயிருக்கிறேன்" என்றார்.

அந்த சிறு வாலிப போர்வீரன் படைவீரர்கள் இருக்கும் தன்னுடைய இடத்திற்கு நடந்து சென்று கொண்டிருப்பதை கவனித்தார், அந்த போர்வீரன் நடந்து அவரை அணுகினான், அவன் பேச விரும்புவது போல காணப்பட்டது. அவன் வலது பக்கமும் இடப்பக்கமும் யாராவது (இருக்கிறார்களா) என்று பார்க்கும்படி என்று நோக்கினான்...

அவன், "நீங்கள் கிறிஸ்தவரா?" என்று கேட்டான்.

சமயகுரு, “ஆம்” என்றார்.

அவனோ, “நானும் கூட கிறிஸ்தவன் தான்” என்றான்.

**அங்கு தான் பதில் உள்ளது. நான்கு பெரிய வல்லமை வாய்ந்த நேச நாடுகளோ, அவைகளின் தலைவர்களோ** (Big Four), **ஐக்கிய நாட்டு சபையோ** (U.N) **அல்ல, ஆனால் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட வழியில் தான் பதில் உள்ளது.** மேலே பின்லாந்தில், ரஷ்யர்களும் பின்லாந்துக்காரர்களும் தங்கள் கரங்களை ஒருவர் மேல் ஒருவர் சுற்றிலும் போட்டுக்கொண்டு ஒருவர் மற்றவரை கட்டி அணைத்துக்கொண்டு, தங்கள் கன்னங்களில் கண்ணீர் வழிய ஒருவர் மற்றவரை முத்தமிட்டதை நீங்கள் கண்டிருப்பீர்கள், சகோதரர்களே.

அவர்களிடையே எந்த விரோதமும் இல்லாதிருந்தது.

இக்காலத்தின் தேவன் தான் (சாத்தான் - தமிழாக்கியோன்) தலைவர்களின் இருதயங்களை தன்வசப்படுத்தி இயக்கிக் கொண்டிருக்கிறான்.

இச்சமயத்தில் உலகத்தின் இராஜ்ஜியங்கள் அனைத்தும் சாத்தானுக்கு சொந்தமாயுள்ளன.

நீங்கள் அதை விசுவாசிக்க விரும்பவில்லை, ஆனால் அது வேதப்பூர்வமானது.

17. சாத்தான் இயேசுவை மேலே கொண்டு சென்று, உலகத்தின் சகல இராஜ்ஜியங்களையும் அவருக்குக் காண்பித்து, "இவைகள் என்னுடையவைகளாயுள்ளன. இவைகளுக்கு நான் விரும்பும் எதையும்

என்னால் செய்ய முடியும்" என்றான். இயேசு அதை அறிந்திருந்தார், ஆனால் அவர் அவைகளுக்கு சொந்தக்காரராய் ஆவார் என்பதையும் அறிந்திருந்தார். சாத்தான், "நீர் கீழே விழுந்து என்னைப் பணிந்துகொண்டால், நான் இவைகளை உமக்குக் கொடுப்பேன்" என்றான்.

இயேசு, "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்றார்.

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில், "பரலோகங்களே, பரிசுத்த தீர்க்கதரிசிகளே களிகூருங்கள், இந்த உலகத்தின் ராஜ்ஜியங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்ஜியங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்ஜியபாரம்

பண்ணி ஆளுகை செய்வார்" என்று எழுதப்பட்டுள்ளது; அதற்குப் பிறகு எந்த யுத்தமும் இருக்காது.

எல்லா இடங்களிலும் உள்ள தலைவர்களும் சுயநலம் கொண்டவர்கள் தான். ஆனால் இந்த எல்லாவற்றினிடையிலும், பரிசுத்த ஆவியால் தேவனுடைய சபையானது வெளியே இழுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

18. அந்த ராஜா எங்கே பதுங்கியிருக்கப்போகிறான் என்பதை எலிசா கண்டு, அவன் இஸ்ரவேலின் ராஜாவிடம் (ஆள்) அனுப்பி, "இப்பொழுது, நீர் அவ்வழியில் போக வேண்டாம். ஏனெனில் அவர்கள் அங்கே இருந்து (பதுங்கியிருந்து) காத்துக்கொண்டிருக்கின்றனர்" என்று கூறினான்.



அந்த அதே தீர்க்கதரிசியை கவனியுங்கள், தோத்தானில் வந்தபிறகு, அவன் அதைக் காணவில்லை... சீரியர் வந்து பட்டணத்தை சூழ்ந்து கொண்டுள்ளனர் என்பதைக் குறித்து கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குக் காண்பிக்கவில்லை, தேவன் அதற்காக வேறொரு வழியை வைத்திருந்தார். தேவன் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு எல்லாவற்றையும் காட்டுவதில்லை. ஆனால் அறிவின்

வார்த்தையானது (Word of knowledge) அவர்கள் அறிவது எவ்வளவு அவசியமோ அவ்வளவாக அதை அவர் தம்முடைய ஊழியக்காரர்களுக்குக் காட்டுகிறார். எனவே அது தேவனுடைய வல்லமையில் வைக்கப்படுவதை நீங்கள் காண்கிறீர்கள், மனிதனுடைய வல்லமையிலல்ல. மனிதன் ஆசீர்வதிக்கப்பட்டிருந்த போதிலும், ஆனால் இன்னுமாக, தேவன் தான் பிதாவாகவும் யாவர் மேலும் ஆளுகை செய்கிறவராகவும் இருக்கிறார்.

பழங்காலத்து பிலேயாம், “தேவன் தன்னுடைய வாயில் வைக்கிறதை மட்டுமே அல்லாமல் (வேறு எதையும்) எந்தத் தீர்க்கதரிசியுமே கூற முடியாது. தேவன் பேசாவிட்டால், அவனால் எப்படி பேச முடியும்” என்றான். அது சத்தியமாக இருந்தது.

19. இப்பொழுது, நாம் பழங்காலத்து தீர்க்கதரிசிகளைக் குறித்து வாசிக்கிறோம், தேவனுடைய வல்லமையைக் குறித்தும், அது எவ்விதம் சபையை நடத்தினது என்பதை குறித்தும் வாசிக்கிறோம். இன்றிரவு, இங்கேயிருக்கும் வெதுவெதுப்பான நண்பனே, கிறிஸ்துவுக்குள் நீ இருக்க வேண்டிய ஸ்தானத்தில் இல்லாமல் இருப்பவனே, மகத்தானதும் மகிமையானதுமான தேவனுடைய வல்லமையானது மீண்டுமாக அவருடைய சபையில் ஆளுகை செய்து, அரசாட்சி செய்கிறது. பின்னாலிருக்கும் ஒருவனாக நீங்கள் இருக்க வேண்டாம். **உலகத்தோடு பிரபலமாயிருக்க முயற்சிக்க வேண்டாம், தேவனோடு சரியாக இருங்கள்,** ஏனெனில் உங்களால் முடியாது. **நீங்கள் கட்டாயம்**

தேவனோடு சரியாக இருக்க வேண்டும், அப்போது நீங்கள் உலகத்தோடு பிரபலமாயிருக்க மாட்டீர்கள்.

நாம் ஜீவித்துக் கொண்டிருக்கும் இந்த நாளில், உங்கள் முழு இருதயத்தோடும் தேவனைத் தேடுங்கள். நீங்கள் மனந்திரும்பும் ஒரு தருணத்தை கொண்டிருக்கும் நேரத்திலும், தேவனுடைய இரக்கமானது கீழே வந்தடையும் நேரத்திலுமாகிய அழைக்க வேண்டிய இந்நேரத்தில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள், கூப்பிடுவதால் எந்த நன்மையும் இல்லாத வேளையானது வருகிறது. அப்பொழுது, அது மிகவும்

**காலதாமதமாகியிருக்கும். இப்பொழுதே கூப்பிடுங்கள்.**

அவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்த, கடந்து போன அந்த நாட்களில் நீங்கள் ஜீவித்திருப்பீர்களானால், நீங்கள் இன்றைக்கு, “நான் அவருக்காக நின்றிருப்பேன். நான் அவருக்காக என்னுடைய ஜீவனையே கொடுத்திருப்பேன்” என்று கூறுகிறீர்கள்.

**நீங்கள் அப்போது அந்த நாட்களில் ஜீவித்திருப்பீர்களானால், அதைச் செய்வதற்கு உங்களுக்குக் கிடைத்திருக்கும் தருணத்தை விட அதிக தருணம் இப்பொழுது உங்களுக்கு உண்டு.**

**இப்பொழுதே நில்லுங்கள், அப்போது இருந்ததைக் காட்டிலும் இன்றைக்கு எதிர்ப்பு அதிகமாய் உள்ளது.**

★★★★★

ஆனால் அங்கு வந்திருந்த ஒவ்வொருவருடைய விஷயத்தையும், நான் வீட்டைவிட்டுப் புறப்படுவதற்கு முன்பே பரிசுத்த ஆவியானவர் என்னிடம், யாரெல்லாம் அங்கு வந்திருப்பார்கள் என்றும், அவர்கள் என்ன கேட்பார்கள் என்றும் வெளிப்படுத்தினார். அவைகளை நான் ஒரு காகிதத் துண்டில் எழுதிக் கொண்டு, அவர்கள் என்ன கேட்பார்கள் என்றும், அந்த கேள்விகளை எந்த விதமாக கேட்பார்கள் என்றும், அவைகளுக்கு எவ்விதம் பதில் கூறப்படும் என்றும் கூறினேன்

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**



## செய்தி: தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை

Jeffersonville, Indiana, USA
63-07-24

௯. இந்த வாரம் நான் அநேக பேட்டிகளில் கலந்து கொண்டேன். ஏனெனில்



ஞாயிறன்று, கர்த்தருடைய கிருபையுள்ள பிரசன்னம் இறங்கி வந்தது. நான் திங்களன்று இவ்விடம் விட்டுசென்றிருக்க வேண்டும்.

நான்... நாங்கள் இன்னும் விடுமுறை எடுத்துக் கொள்ளவில்லை, பிள்ளைகள் என் விடுமுறை சிறிது கழிந்தே வரும். ஆனால் சில நாட்களுக்கு என் பிள்ளைகளை எங்காவது கொண்டு செல்ல விரும்புகிறேன். அவர்கள் வீடு திரும்பி, பள்ளிக்குச் செல்ல வேண்டும். எனவே அவர்களை கொண்டு செல்ல இந்த வாரம் ஒரு நல்ல தருணமாயிருக்கும் என்று எண்ணினேன். அடுத்த வாரம்

சிக்காகோவில் நடக்கும் கூட்டத்திற்கு செல்ல வேண்டும்.



ஆனால் ஆவியின் அபிஷேகம் தங்கியிருந்ததால், “பேட்டிகள் நடத்துவதற்கு அதுவே ஏற்றதருணம்” என்று கருதினேன். இந்த நேரத்தில் தான்... அவர்கள் சிலருடன் ஈடுபடலாம். அங்கு... அந்த அறையில் இருந்த சிலர்

இங்கு உட்கார்ந்திருப்பதைக் காண்கிறேன். கர்த்தர் எங்களைச் சந்தித்தாரா இல்லையாவென்று அவர்களுக்குத் தெரியும்.



10. விசித்திரமான காரியம் என்னவெனில்... பேட்டிக்கு சற்று

முன்பு காலியான இடங்களில் பில்லி உட்கார வைத்த சில ஸ்திரீகளைத் தவிர மற்ற ஒவ்வொருமே; ஏதோ ஒரு ஸ்திரீ லூயிலில்லில் இருந்து வந்திருந்தாள், அவள் ஒரு சிறு பெண்ணைக் கூட கொண்டு வந்திருந்தாள். அவர்கள் லூயிவில்லில் உள்ள ’தேவ சபையை’ (Church of God) சேர்ந்தவர்கள் என்று நினைக்கிறேன்.

**ஆனால் அங்கு வந்திருந்த ஒவ்வொருவருடைய விஷயத்தையும், நான் வீட்டைவிட்டுப் புறப்படுவதற்கு**

முன்பே பரிசுத்த ஆவியானவர் என்னிடம், யாரெல்லாம் அங்கு வந்திருப்பார்கள் என்றும், அவர்கள் என்ன கேட்பார்கள் என்றும் வெளிப்படுத்தினார்.

அவைகளை நான் ஒரு காகிதத் துண்டில் எழுதிக் கொண்டு, அவர்கள் என்ன கேட்பார்கள் என்றும், அந்த கேள்விகளை எந்த விதமாக கேட்பார்கள் என்றும், அவைகளுக்கு எவ்விதம் பதில் கூறப்படும் என்றும் கூறினேன்.

நான் அவர்களிடம், "இது தான் நீங்கள் கேட்கவிருந்த... இப்பொழுது பாருங்கள், சில நிமிடங்களுக்கு முன்பாக பரிசுத்த ஆவியானவர் என்ன..." என்று சொல்லி

மேசையின் மேலிருந்த காகிதத் துண்டை கையை நீட்டி எடுத்து, "பார்த்தாயா? நீ வருவதற்கு முன்பே அவர் என்னிடம் இதை கூறினார்" என்று கூறினேன். பாருங்கள்?

**நான் வீட்டில் இருந்த போது, யார் அங்கே இருப்பார்கள் என்றும், அது எவ்விதம் இருக்கும் என்றும், அவர்களுடைய மனப்போக்கு எவ்விதமாய் இருக்கும் என்றும், அதைக் குறித்து எல்லாமே, நான் வீட்டை விட்டுப் புறப்படும் முன்னர் என்னிடம் கூறப்பட்டது.**


Rylik.ru

11. அநேக சமயங்களில் நான் சாலையின் வழியாக ஜெபித்துக் கொண்டு வரும் போது, அந்த ஜெபவரிசை எனக்கு முன்னால் கடந்து செல்வதைக் கண்டிருக்கிறேன்.

அங்கு நான் அடைவதற்கு முன்பே, ஜெபவரிசையில் உள்ள ஒவ்வொருவரின் பெயரையும் நான் முன்கூட்டியே அறிந்து கொள்வேன். அது உண்மை.

அவர்கள் சபையில் எந்த இடத்தில் உட்கார்ந்திருப்பார்கள் என்றும்... அவர்கள் எவ்விதம் உடுத்தியிருப்பார்கள், அவர்கள் எவ்விதம் காணப்படுவார்கள்

**என்றெல்லாம் எனக்கு முன்கூட்டியே தெரியும்.**

இவைகளையெல்லாம் நான் ஜனங்களிடம் சொல்வதில்லை.

நீங்கள் நடக்கும் இக்காரியங்களை அவர்களிடம் கூறுவதில்லை, அவர்களிடம் கூறவேண்டிய அவசியமும் இல்லை.

ஜனங்களுக்கு உதவியாயிருக்கும் என்று நான் கருதுபவைகளையே நான் கூறுகிறேன்.

“இதை சொல்” என்று தேவன் அவர்களிடம் கூற வேண்டியவைகளை என்னை நெருக்கி ஏவுவதையே நான்

கூறுகிறேன். நான் காணும் எல்லாவற்றையும் சொல்லமாட்டேன்.

ஏனெனில் அது சரியல்ல, பாருங்கள், நீங்கள்... நீங்கள் தொல்லையில் மாட்டிக் கொள்கிறீர்கள் என்பது உண்மைதான்.

கர்த்தருடைய ஆவியினால் இவைகளை எவ்விதம் கையாள வேண்டும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.





12. சில சமயங்களில் ஜனங்கள் எனக்கு முன்னால் நின்று கொண்டு என்னை

கேள்விகள் கேட்பார்கள், அது என்னவென்று எனக்குத் தெரியும், ஆனால் நான் அவர்களிடம் கூறுவதில்லை, ஏனெனில் அவ்விதம் செய்யக் கூடாது என்னும் தடை உணர்ச்சி என்னில் உண்டாகின்றது.

உங்களுக்கு ஞாபகமுள்ளதா, நான் கட்டுண்டவன் என்பதன் பேரில் பிரசங்கித்தேன், அது சென்ற புதன் இரவு என்று நினைக்கிறேன் ("உரைக்கப்பட்ட வார்த்தை" வால்யூம் 2, எண்: 8 – ஆசி). பாருங்கள்?

அந்த நபரிடம் நீங்கள் கூற வேண்டுமென்று நினைக்கிறீர்கள்.

ஆனால் ஏதோ ஒன்று "அதை செய்யாதே" என்று கூறுகிறது.

ஆவியானவர், "அதை செய்யாதே, அதை செய்யாதே" என்று கூறுகிறார்.

இருப்பினும் அந்த வரம் அதை நேராக நோக்கிக் கொண்டிருக்கிறது, பாருங்கள். "அதை செய்யாதே, அதை செய்யாதே" பாருங்கள், எனவே அதை செய்யாமலிருப்பது நலம்; இல்லையெனில் நீங்கள் தேவனிடம் தொல்லையில் அகப்பட்டுக் கொள்வீர்கள்.

★★★★★

நான் அறையில் உட்கார்ந்து
கொண்டிருப்பேன். நான் உணவகத்தில்
உட்கார்ந்து கொண்டிருப்பேன்.
அப்பொழுது சம்பவிக்கப்போகின்ற
காரியங்களை பரிசுத்த ஆவியானவர்
என்னிடத்தில் கூறுவார்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**செய்தி: எவ்விதமாக தூதன் என்னிடத்திற்கு வந்தார்**, ஜனவரி 17, 1955

91. அது என்னவாக இருந்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். அது என் மேலும் வரும். அதாவது நான் அதை அறிய வேண்டுமென்று தேவன் விரும்புவாரானால், அப்பொழுது அந்த காரியங்களை அறிந்து கொள்ளும்படியாக நான் ஒரு வழியை உடையவனாயிருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த காரணத்தினால் தான் நான் இதைக்

குறித்து மூச்சு விடுகிறதில்லை. மேலும் இதை பொது ஜனத்திற்கு முன்பாகவும் கூறினதே கிடையாது. **நான் உண்மையாகவே ஏதோ ஒரு காரியத்தை அறிய வேண்டுமானால், அப்பொழுது கர்த்தர் வழக்கமாக அந்த காரியங்களைக் குறித்து என்னிடம் கூறிவிடுவார்.** அதற்காகவே அந்த வரம் இருக்கிறது. உங்களுக்குப் புரிகின்றதா?

எனவே அதை தூக்கி ஜனங்கள் முன்பாக எறிய முடியாது, ஏனெனில் அது பன்றிக்கு முன்பாக உங்களுடைய முத்துக்களை எறிவது போலாகும்.

அது ஒரு புனிதமான, பரிசுத்தமான காரியமாக இருக்கிறது. ஆயினும் அதைச் செய்ய நீங்கள் விரும்புகிறதில்லை.

எனவே, தேவன் என்னை அதற்காக உத்தரவாதமுடையவனாக்குவார்.

சகோதரர்களிடத்தில் பேசுதல் போன்ற காரியங்களைப் போன்றே, ஒரு சகோதரனைக் குறித்த பொல்லாங்கான ஏதோ காரியத்தை நான் அறிய விரும்பமாட்டேன்.

92. ஒரு சமயம் ஒரு மனிதனுடன் மேஜையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

அவன் தன்னுடைய கரத்தை என் மேல் போட்டிருந்தான். அப்பொழுது

அவன், "சகோதரன் பிரான்ஹாம் நான் உங்களை நேசிக்கிறேன்" என்றான்.

ஏதோ ஒரு காரியம் அசைந்து கொண்டிருக்கிறது போன்றதான உணர்வெனக்கிருந்தது.

அப்பொழுது நான் அவரை நோக்கிப் பார்த்தேன். அவன் அதை என்னிடத்தில் கூறியிருக்க முடியாது.

அவன் அதைச் செய்யவில்லையென்று நான் அறிந்துகொண்டேன், பாருங்கள், ஏனென்றால் அங்கேதான் அந்த காரியம் இருந்தது.

**அங்கு ஒரு மாய்மாலக்காரன் இருந்தான்**

**என்றால் அது சரியாக இவனே.**

ஆனால் பாருங்கள், அவனோ அங்கே என்மேல் தன்னுடைய கரத்தை போட்டுக்கொண்டிருந்தான்.

93. நான் சரி என்று கூறி கடந்து சென்றுவிட்டேன். நான் அதை அறிந்து கொள்ள விரும்பவில்லை.

என்னுடைய சகோதரன் என்ற முறையில், நான் அறிந்த முறையில் நான் அவனை அறிந்திருந்தேன்.

அது அந்த விதமாகவே போகட்டும். எஞ்சியுள்ளதை தேவன் செய்யட்டும். புரிகின்றதா? இந்த காரியங்களையெல்லாம் நான் அறிந்து கொள்ள விரும்பவில்லை.

94. இந்த காரியங்களின் பேரில் அநேக முறைகள், இங்கே இந்த சபைக்குள்ளாக இல்லை. **நான் அறையில் உட்கார்ந்து கொண்டிருப்பேன். நான் உணவகத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பேன். அப்பொழுது சம்பவிக்கப்போகின்ற காரியங்களை பரிசுத்த ஆவியானவர் என்னிடத்தில் கூறுவார். அது உண்மை என்பதை இங்குள்ள ஜனங்கள் அறிவர்.**

**நான் வீட்டில் உட்கார்ந்து கொண்டிருப்பேன், உதாரணமாக, "இப்பொழுது ஜாக்கிரதையாயிரு.**

கொஞ்சம் கழித்து ஒரு கார் வரப்போகின்றது. இன்னின்ன நபர் அதிலே இருப்பான். அவர்கள் இங்கே இருப்பார்கள் என்று கர்த்தர் கூறியுள்ளபடியால் அவர்களை இங்கே உள்ளே கொண்டு வாருங்கள்" என்பேன்.

மேலும் அவர், "நாங்கள் வீதிக்குச் செல்லும் போது அங்கே இன்னின்ன காரியம் சம்பவிக்கும். அங்கே வீதியின் சந்திப்பில் கவனி, அங்கே நீ சற்றேறக்குறைய மோதிவிடப் போகின்றாய்" என்று கூறுவார். அந்தவிதமாக அது

**இருக்கவில்லையா? என்று பாருங்கள்.**

**அது ஒவ்வொரு நேரத்திலும் அப்படியே பரிபூரணமாக இருக்கிறதே!**

ஆயினும் நீங்கள் உங்களை அதன் பேரில் அதிகமாய் சார்ந்திருக்கும்படி செய்து கொள்ள வேண்டாம். ஏனென்றால் நீங்கள்... அது.... நீங்கள் அதை உபயோகிக்கலாம். அது ஒரு தேவனுடைய வரம். ஆனால் அதனைக் கொண்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதையும், நீங்கள் கவனிக்க வேண்டும். தேவன் உன்னை அதற்காக பதில் கூறும்படி செய்வார்.

~ 10 ~

★★★★★

# அவளுடைய எல்லாவற்றையும் கர்த்தர் அறிவார்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## புத்தகம்: பில்லிபால் அவர்களின் சாட்சிகள் (பில்லிபால் அவர்கள் சகோ. பிரன்ஹாம் அவர்களின் மகன்)

ஒரு முறை சிந்தனையை பகுத்தறியும் சமயத்தில் மேடையில் ஒரு ஸ்திரீ வந்தாள்.

தகப்பனார் அவளிடம், "மாலை வணக்கம், சகோதரியே" என்றார். அவளும், "மாலை வணக்கம்" என்றாள்.

அவர், "உன்னுடைய பெயர் இன்னின்னது, நீ இந்த முகவரியில் வசிக்கிறாய்" என்று கூறினார்.

அவள், “அது சரியே” என்றாள்.

அப்பொழுது அங்கே கீழே இரண்டு ஸ்திரீகள் இதை கவனித்து கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருத்தி, “ஆ, அங்கே அது தவறாயுள்ளது. அங்கே மேலே மேடையில் இருப்பவளாகிய மேரியை எனக்குத் தெரியும், அவள் அங்கே வசிக்கவில்லை. அவள் வால்நெட் தெருவில் வசிக்கிறாள்” என்றாள்.

ஆனால் சகோ.பிரான்ஹாமோ, “நீ 824 மேப்பிள் தெருவில் வசிக்கிறாய்” என்று கூறினார். அவளும், “ஆம்” என்றாள்.

எனவே இந்த ஸ்திரீ, “அவள் பொய் சொல்கிறாள். அவள் எங்கு வசிக்கிறாள் என்பது நமக்கு தெரியும்” என்றாள்.

ஆராதனை முடிந்த பிறகு மேடையில் நின்ற ஸ்திரீயும் அந்த இரண்டு ஸ்திரீகளும் சந்தித்துக் கொண்டனர்.

“மேரி எப்படி இருக்கிறாய்?”

“ஜேன் எப்படி இருக்கிறாய்?”

அவர்களிருவரும் ஒருவரையொருவர் அறிந்திருந்தனர்.

ஒருத்தி அவளிடம், “நீ கூறுவதை நான் கேட்டேன். நீ

அந்த முகவரியில் வசிக்கவில்லையே. மேரி, நீ மேப்பிள் தெருவில் வசிக்கவில்லையே. நீ வால்நட் தெருவில் அல்லவா வசிக்கிறாய். நீ அங்கு வருடக்கணக்காக வசிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்" என்றாள்.

அதற்கு மேடையில் இருந்த ஸ்திரீ, "ஓ, நான் உன்னிடம் சொல்ல மறந்து விட்டேன். நான் நேற்றைக்கு முந்திய தினம் தான் இடம் பெயர்ந்தேன் (moved)!" என்றாள்.

ஆம், தேவன் தவறு செய்வதேயில்லை.

★★★★★

# நானோ அவரைப் பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் பாருங்கள். முடிவிலே நான் அவருடைய ஆவியைக் கண்டறிந்தேன்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: எவ்விதமாக தூதன் என்னிடத்திற்கு வந்தார், ஜனவரி 17, 1955

99. எனவே அந்நாளில் நான், "நான் மேலேறி நடந்து சென்று கொண்டிருக்கிறேன்" என்று எண்ணினேன். அந்த ஜனங்களைக் குறித்து அதிகமாய் எச்சரிப்படைந்து, பின்னர் நான், "அந்த மனிதர்களைக் குறித்து நான் கண்டறிவேன்" என்று எண்ணினேன். நான் வெளியே திறந்த வெளியில் கூட்டம் முடிந்தவுடன் அவர்களை கவனித்துக் கொண்டே இருந்தேன். நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். அவர்களில் ஒருவரை

கண்டுபிடித்தேன். அப்பொழுது நான் அவரிடத்தில், "ஐயா எப்படி இருக்கின்றீர்கள்?" என்று கேட்டேன்.

100. அதற்கு அவர், "நீர் எப்படி இருக்கிறீர் என்றும், இன்று காலையில் பிரசங்கித்த அந்த வாலிப பிரசங்கியார் நீர்தானே?" என்றும் கேட்டார்.

அதற்கு நான் ........ அப்பொழுது நான் இருபத்தி மூன்று வயதுடையவனாக இருந்தேன். எனவே நான், "ஆம் ஐயா" என்றேன்.

அதன் பின்னர் அவர், "உம்முடைய பெயர் என்ன?" என்று கேட்டார்.

அதற்கு நான், "பிரான்ஹாம்" என்றேன். பின்னர் நான், "உம்முடைய பெயர் என்ன?" என்று கேட்டேன்.

101. அவருடைய பெயரை என்னிடத்தில் கூறினார். அப்பொழுது நான், "நல்லது, இப்பொழுது அவருடைய ஆவியோடு என்னால் தொடர்பு கொள்ளக்கூடுமானால் நலமாயிருக்குமே" என்று எண்ணினேன். அதனை செய்துகொண்டிருக்கிறது எது என்பதை இன்னமும் அறியாதிருந்தேன். பின்னர் நான், "நல்லது, சரி ஐயா" என்று கூறி தொடர்ந்து, "நான் பெற்றிராத ஏதோ காரியத்தை இங்கே உள்ள

ஜனங்களாகிய நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்" என்றேன்.

அதற்கு அவர், "நீர் விசுவாசியானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீரா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "நான் ஒரு பாப்டிஸ்ட்" என்றேன்.

102. அதற்கு அவரோ, "நீர் விசுவாசியான போதே பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டீரோ?" என்று கேட்டார்.

103. அதற்கு நான், "சரி சகோதரனே, நீர் என்ன கூறுகிறீர்?" என்று கேட்டேன். பின்பு நான், "நீங்கள் எல்லோரும் பெற்றிருப்பதை

நான் பெற்றுக்கொள்ளவில்லை. நான் அதை அறிவேன்" என்றேன். மேலும் நான், "வல்லமையுள்ளதைப் போன்று காணப்படுகின்ற ஏதோ காரியத்தை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்" என்றேன். அதற்கு அவர், "நீங்கள் எப்பொழுதாவது அந்நிய பாஷையில் பேசியிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "இல்லை ஐயா" என்றேன்.

அப்பொழுது அவர், "அப்படியானால் நீர் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லை என்று என்னால் உடனடியாக கூறமுடியும்" என்றார்.

104. அப்பொழுது நான், "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள அது சம்பவிக்க வேண்டுமென்றால், அப்பொழுது நான் அதை பெற்றுக்கொள்ளவில்லை" என்றேன்.

105. ஆகவே அவர், "நீர் அந்நிய பாஷையில் பேசினதில்லையென்றால், நீர் அதை பெற்றிருக்கவில்லை" என்றார்.

106. அவருடைய உரையாடல் அந்தவிதமாயிருக்கையில், நான், "நான் அதை எங்கே பெற்றுக்கொள்ள முடியும்?" என்று கேட்டேன்.

107. அதற்கு அவர், "அங்கே இருக்கின்ற அந்த அறைக்குள்

சென்று பரிசுத்தாவியை தேடத் துவங்குங்கள்” என்றார்.

108. **நான் தொடர்ந்து அவரை கவனித்துக் கொண்டிருந்தேன். உங்களுக்குத் தெரியுமா? நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.** ஆனாலும் அவர் ....... **அவர் ஒரு விநோதமான உணர்வை உடையவராயிருந்தார் என்பதை நான் அறிந்து கொண்டேன்.** ஏனென்றால் அவர் ........ அவர் என்னை நோக்கிப் பார்க்கும்போது அவருடைய கண்கள் சற்று கண்ணாடி போலிருந்தது. ஆனால் **அவர் ஒரு**

**உண்மையான கிறிஸ்தவராய் இருந்தார்.** அது உண்மை. அப்பொழுது நான், "தேவனுக்கு ஸ்தோத்திரம். இதுதான் காரியம். நான் அந்த பீடத்தண்டை சென்றாக வேண்டும்" என்று எண்ணினேன்.

109. நான் வெளியே போய் சுற்றும் முற்றும் பார்த்தேன். அப்பொழுது நான், "அந்த இன்னொரு மனிதனையும் நான் கண்டுபிடிப்பேன்" என்று எண்ணினேன். நான் அவரை கண்டுபிடித்து அவரிடத்தில் பேசத் துவங்கியதும், "ஐயா, நீர் எப்படியிருக்கிறீர்?" என்று கேட்டேன்.

110. அதற்கு அவர், “நீர் எந்த சபையை சேர்ந்தவர்?” என்று கேட்டார். மேலும் அவர், “நீர் ஒரு பாப்டிஸ்ட் என்று அவர்கள் என்னிடம் கூறுகிறார்களே” என்றார்.

அதற்கு நான், “ஆம்” என்றேன்.

அதற்கு அவர், “நீர் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெறவில்லையே, நீர் பெற்றுவிட்டீரா?” என்று கேட்டார்.

அதற்கு நான், “எனக்குத் தெரியாது” என்றேன்.

அதற்கு அவர், “நீர் எப்பொழுதாவது அந்நிய பாஷையில் பேசியிருக்கிறீரா?” என்று கேட்டார். நான், “இல்லை ஐயா” என்றேன்.

அவர், “நீர் இன்னும் அதை பெற்றுக்கொள்ளவில்லை” என்றார்.

111. நான், “நீங்கள் யாவரும் பெற்றுள்ளதை நான் பெற்றிருக்கவில்லை என்பதை நான் அறிவேன். நான் அதை அறிவேன்” என்றேன். மேலும் நான், “ஆனால் என் சகோதரனே உண்மையாகவே அது எனக்கு வேண்டியதாயிருக்கிறது” என்றேன்.

அதற்கு அவர், “அங்கே தண்ணீர் தடாகம் ஆயத்தமாயிருக்கிறதே” என்றார்.

112. அப்பொழுது நான், “நான் ஞானஸ்நானம் பெற்றுவிட்டேன்” என்று கூறிவிட்டு, “ஆனால் நீங்கள்

பெற்றுக் கொண்டதை நான் பெற்றிருக்கவில்லையே” என்றேன்.

மேலும் நான், “எனக்கு உண்மையாகவே தேவைப்படுகிற ஒன்றை நீங்கள் உடையவர்களாயிருக்கிறீர்கள்” என்றேன்.

அதற்கு அவர், “அது மிகவும் அருமையாயிருக்கிறது” என்றார்.

113. **நானோ அவரைப் பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தேன்.** நீங்கள் பாருங்கள். **முடிவிலே நான் அவருடைய ஆவியைக் கண்டறிந்தேன்.** அது இன்னொரு மனிதனாயிருந்தது. நான் எப்பொழுதாவது ஒரு கீழ்த்தரமான

மாய்மாலக்காரரோடு பேசியிருப்பேனேயானால் இவன் அவர்களில் ஒருவனாவான். அவனுடைய மனைவி ஒரு கறுத்த தலைமுடியை கொண்ட ஸ்திரீயாக இருந்தாள். ஆனால் அவரோ பழுப்பு நிற தலை முடியைக் கொண்ட ஒரு ஸ்திரீயுடன் ஜீவித்துக்கொண்டு, அவள் மூலம் பிறந்த இரண்டு பிள்ளைகளை உடையவனாயிருந்தான். அவன் குடிப்பதும், சபிப்பதும், மதுபான கடைக்கு ஒடுவது, மற்றெல்லா காரியங்களையும் செய்துகொண்டு, அதே சமயத்தில் அங்கே அந்நிய பாஷையில் பேசிக்கொண்டும், தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டுமிருந்தான்.

114. பின்பு நான், "கர்த்தாவே, என்னை மன்னியும்" என்றேன். அதன்பின் நான் வீட்டிற்குச் சென்றேன். அது உண்மை. **மேலும் நான், "என்னால் அதை புரிந்து கொள்ள முடியவில்லையே." அந்த மாய்மாலக்காரன் மீதும் ஆசீர்வாதமான பரிசுத்த ஆவி இறங்குவது போன்று தென்படுகிறதே" என்று கூறிக்கொண்டேன்.** ஆயினும், நான், "அவ்வாறிருக்க முடியாதே! அவ்வளவுதான்," என்றும் கூறிக்கொண்டேன்.

115. அதன் பின்னர் நீண்ட காலமாக இதைக் குறித்து நான் ஆராய்ந்துகொண்டும்,

ஜெபித்துக்கொண்டும் இருந்தபோது, ஒருக்கால் அவர்களோடு வெளியே சென்றால், அவை யாவும் என்னவென்பதைக் குறித்து என்னால் கண்டறிய முடியும் என்றும் எண்ணினேன். **இதோ ஒருவன் அசலான கிறிஸ்தவனாயிருக்கிறான். இன்னொருவனோ ஒரு உண்மையான மாய்மாலக்காரனாய் இருக்கிறான்.** பின்னர் நான், "இது என்னவாயிருக்கும்? ஓ" என்று எண்ணினேன். பின்பு நான், "தேவனே ஒருக்கால் என்னிடத்தில் ஏதோ காரியம் தவறாக இருக்கலாம்" என்று கூறினேன். நான் ஒரு

அடிப்படைவாதியாயிருக்கிறபடியால், "அதை வேதத்தில் கண்டறிய வேண்டுமே. அது வேதத்தில் இருக்க வேண்டும்" என்றும் கூறிக்கொண்டேன்.

116. **என்னைப் பொறுத்தமட்டில் கிரியையில் வருகின்ற ஒவ்வொரு காரியமும் வேதத்திலிருந்தே வரவேண்டும். இல்லையென்றால் அது சரியானதல்ல. அது இங்கேயிருந்தே வரவேண்டும். அது வேதத்தில் நிரூபிக்கப்பட வேண்டும்.** ஆனால் அது வெறுமனே ஒரு இடத்தில் என்றில்லாமல் எல்லா

**விதங்களிலும் வேத்திரைடாகவே வரவேண்டும். நான் அதை விசுவாசித்தாக வேண்டும். அது ஒவ்வொரு வேத வார்த்தையோடும் ஒன்றாய் இணைய வேண்டும், ஒன்றாய் பொருந்த வேண்டும். இல்லையென்றால் நான் அதை விசவாசிப்பதில்லை.** அந்த காரணத்தினால்தான் பவுல், "வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன்" என்றான். எனவே நான் வேதத்தை விசுவாசிக்கிறேன்.

மேலும், "அந்தவிதமாய் நான் வேதத்தில் ஒன்றையுமே காண முடியவில்லையே" என்றேன்.

117. இரண்டு வருடங்களுக்குப் பின்னர், நான் என்னுடைய மனைவி மற்றும் எல்லா காரியங்களையும் இழந்த பின்னர், நான் கிரீன்ஸ் மில் (Green's Mill) என்ற இடத்திற்குச் சென்று அங்கே உயரே இருக்கின்ற என்னுடைய சிறிய பழைய இடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தேன். இரண்டு இல்லை மூன்று நாட்களாக, இரண்டு நாட்களாக அங்கே என்னுடைய குகையில் இருந்தேன். அப்பொழுது சற்று சுவாசிக்கும்படியாக காற்றைப் பெற நான் வெளியே நடந்து வந்தேன்.

நான் அங்கே வெளியே வந்து நடக்கும் போது, அங்கு இருந்த ஒரு மரக்கட்டையின் நுனியில் அதாவது உள்ளே வரும்போதுள்ள நுனியில் என்னுடைய வேதாகமத்தை வைத்திருந்தேன். ஒரு பழைய மரம் சாய்ந்து கிடந்தது. அதில் கிளை இரண்டாக பிரிந்திருந்தது. மரமானது கீழே விழுந்திருக்க இரண்டு கிளைகளும் மேல் நோக்கியவாறு இருந்தன. சில நேரங்களில் இந்த விதமாக உட்கார்ந்துகொண்டு இரவு நேரங்களில் அப்படியே ஆகாயத்தையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பேன். என்னுடைய கரங்களை இந்தவிதமாக மேல் நோக்கியிருக்க சில நேரங்களில் ஜெபிப்பது போன்று மரக்கிளையின்

மேல் உட்கார்ந்து தூங்கிக்கொண்டிருப்பேன், அங்கேயே பல நாட்கள் இருப்பேன். **அப்படியே புசிக்காமலும், குடிக்காமலும் அங்கேயே ஜெபித்துக் கொண்டேயிருப்பேன்.** நான் புதியதான காற்றை சுவாசிக்கும்படியாக குகையை விட்டு வெளியே நடந்து வந்தேன். அப்போது அங்கே அது குளிர்ச்சியாயும், ஈரமாயும் இருந்தது.

118. ஆக அதன்பின்பு நான் குகையை விட்டு வெளியே வந்து முந்தின நாள் வைத்த இடத்திலேயே என்னுடைய வேதாகமத்தை வைத்தபோது, அப்படியே எபிரேயர் 6-ம் அதிகாரத்திற்கு பக்கங்கள்

திருப்பப்பட்டன. அப்போது நான் அந்த இடத்திலிருந்து வாசிக்கத் துவங்கினபோது, “செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம் முதலான காரியங்களாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக” என்றிருந்தது. மேலும், “ஏனெனில் ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், மறுதலித்துப் போனவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்” என்றிருந்தது. ஆனால் அதில் கீழே, “எப்படியெனில், தன்மேல் அடிக்கடி

பெய்கிற மழையைக் குடித்து முட்செடிகளையும், முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும், சபிக்கப்படுகிறதற்கேற்றதாயும் இருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு" என்றிருந்தது.

அப்பொழுது ஏதோ ஒன்று "உஷ்ஷ்ஷ்" என்று கடந்து சென்றது.

119. நான், "இதோ அது இருக்கிறது. இப்பொழுது அவர் என்ன கூறினாலும் நான் ......... கவனித்துக் கேட்பேன் ......... அவர் இங்கே என்னை எழுப்பி விட்டார். அவர் இப்பொழுது எனக்கு ஒரு தரிசனத்தை கொடுக்கப் போகிறார்" என்று எண்ணிக்கொண்டேன். எனவே

நான் அந்த மரத் துண்டின் முனையில் அங்கேயே அமர்ந்து காத்திருந்தேன். நான் எழும்பி நின்று முன்னும் பின்னுமாக, மேலும் கீழுமாக நடந்தேன். அப்போதும் ஒன்றுமே சம்பவிக்கவில்லை. மீண்டுமாய் என்னுடைய குகைக்கு நடந்து சென்றபோதும் ஒன்றும் சம்பவிக்கவில்லை. எனவே நான், அங்கேயே நின்று, பின்னர் நான், "சரி, இது என்னவாயிருக்கிறது?" என்று யோசித்துப் பார்த்தேன்.

120. நான் மீண்டுமாக என்னுடைய வேதத்தண்டைக்கு நடந்து சென்றேன். ஓ, அதில் மீண்டுமாய் பக்கங்கள் திரும்ப அதே இடத்திற்கு வந்தன. நான் அதை

கரத்திலெடுத்தேன். பின்பு நான், "நான் அறிய வேண்டும் என்று அவர் விரும்புகின்றது என்ன அதில் இருக்கிறது?" என்று நினைத்தேன். நான் அதைத் தொடர்ந்து கீழே வாசிக்கலானேன். "தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், மனந்திரும்புதல்" முதலானவைகள் என்றிருக்க நான் தொடர்ந்து, "எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற

நிலமோ தகாததாயும், சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு" என்று எழுதப்பட்டிருந்ததை வாசித்தேன். ஓ, அது என்னை அப்படியே அசைக்கக்கூடியதாயிருந்ததே!

121. அப்பொழுது நான், "கர்த்தாவே நீர் எதைக் குறித்ததான தரிசனத்தை எனக்கு கொடுக்கப்போகிறீர்" என்று எண்ணினேன். நான் அங்கு வேறு ஒரு காரியத்தை அவரிடம் கேட்கப்போவதாக இருந்தேன்.

122. **பின்னர் சடுதியாக எனக்கு முன்பாக ஒரு உலகம் உருண்டு கொண்டிருப்பதை நான்**

கண்டேன். அது முழுவதும் உழுப்பட்டிருந்தது. வெண்மையான ஆடையணிந்த ஒரு மனிதன் தலை நிமிர்ந்த வண்ணமாய் இவ்விதமாக விதைத்துக் கொண்டே சென்றான். அவன் அவ்விதமாக ஒரு குன்றின் மேல் ஏறிப்போன வுடனே அவனைத் தொடர்ந்து இதோ இன்னொரு மனிதன் கறுப்பான ஆடை அணிந்தவனாய் தலை வணங்கினவாறு விதைகளை விதைத்துக் கொண்டு சென்றான். நல்ல விதைகள் முளைத்து வெளிவந்தபோது, அவை கோதுமைகளாயிருந்தன. கெட்ட

**விதைகள் வளர்ந்து வெளிவந்தபோது, அவை களைகளாயிருந்தன.**

123. அதன் பின்னர், பூமியின் மேல் ஒரு பெரிய வறட்சி உண்டானது. கோதுமை செடியின் தலை தொங்கிப்போய் தண்ணீர் தேவையினால் அழிந்துபோகும் நிலையிலிருந்தது. ஜனங்களெல்லோரும் கரங்களை உயர்த்தி, மழையை அனுப்பும்படி தேவனிடத்தில் ஜெபித்துக் கொண்டிருக்கிறதை நான் கண்டேன். அதற்குப் பிறகு நான் களைகளைப் பார்த்தேன். அது அதின் தலையை தொங்கவிட்டுக் கொண்டு தண்ணீருக்காக தலை வணங்கிக்

கொண்டிருந்தது. பின்னர் சரியாக பெரிதான மேகங்கள் குறுக்கே வந்து மழையை பொழிய ஆரம்பித்தன. அப்படி மழை பெய்தபோது அப்படியே முழுவதுமாக வளைந்து இருந்த கோதுமையானது "உஷ்ஷ்" என்று எழும்பி நின்றது. நேராக அதின் பக்கத்தில் இருந்த அந்த களையானதும் "உஷ்" என்று நிமிர்ந்து நின்றது.

அப்பொழுது நான், "அப்படியென்றால், அது என்னதான்?" என்று எண்ணினேன்.

124. பின்னர் அது எனக்கு புரிய வந்தது. இதுதான் காரியம். **கோதுமையை விளையச்செய்யும் அதே மழைதான் களையையும்**

**வளரச்செய்கிறது.** ஆகையால் அதே பரிசுத்த ஆவியே ஒருகூட்ட ஜனங்களின் மேலும் ஊற்றப்படவும், மற்றவர்களை ஆசீர்வதிப்பது போன்றே ஒரு மாய்மாலக்காரனையும் ஆசீர்வதிக்க முடியும். எனவே இயேசு, "**அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்கள்**" என்றார். ஆக நாம் கூச்சலிடுவதோ, களிகூர்வதோ அல்ல, ஆனால் "**அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்கள்**" என்பதேயாகும்.

125. நான், "அதுதான் காரியம். எனவே கர்த்தாவே, நான் அதை

புரிந்து கொண்டேன்" என்றேன். பின்பு நான், "அப்படியானால் அதுதான் உண்மையான சத்தியமாயிருக்கிறது" என்றேன். **எனவே தேவனை அறியாமலேயே நீங்கள் வரங்களை உடையவர்களாக இருக்கக்கூடும்.**

126. **ஆகையால் நான் அந்நிய பாஷையில் பேசுவதின் பேரில் அதிக கண்டிப்பாக இருந்தேன்.** நீங்கள் பாருங்கள், ஆனால் ஓர் நாள் எப்படியாய் தேவன் அதை எனக்கு ரூபகாரப்படுத்தினார்.

*செய்தி:* **எவ்விதமாக தூதன் என்னிடத்திற்கு வந்தார்,** ஜனவரி 17, 1955

★★★★★

# இயேசு ஜனங்களின் மனதிலுள்ளவைகளை புரிந்து கொண்டார் என்று உங்களுக்கு தெரியுமா? அவர் அவர்களின் சிந்தனைகளை அறிந்துகொண்டார்







வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: எங்கள் நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது, செப்டம்பர் 29, 1951

20. கடந்த மாலை வேளையில், அந்த சிறு, சந்தோஷ செய்தி கூடாரத்தில் (Glad Tidings Tabernacle) நான் பேசிக்கொண்டிருந்தேன், அங்கே தான் எங்களுக்கு ஆராதனை இருந்தது, ஏனென்றால் இங்கே சென்ற மாலையில் இந்த மண்டபம் (hall) உபயோகத்தில் இருந்தது. பின்லாந்தில் அந்த சிறுவனை மரணத்தினின்று எவ்வாறு கர்த்தர் உயிரோடெழுப்பினார் என்பதைக் குறித்து நான் பேசிக்கொண்டிருந்தேன், அது சம்பவிப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே அதை ஒரு தரிசனத்தில் கண்டேன்.

இப்பொழுது, அதை செய்தது எது? உங்கள் சகோதரன் அல்ல, ஆனால் தேவனுடைய ஆவியானவர் தான் அதைச் செய்தார். எலியாவின் மேலிருந்த, கடந்து போன மனுஷர்களின் மேலிருந்த அதே ஆவி தான் இது; இன்று உலகத்தில் அதே ஆவி தான் அசைவாடிக் கொண்டிருக்கிறது. அது காண்கிறது, முன்னுரைக்கிறது; நீங்கள் அதைக் கவனியுங்கள். இன்றிரவு கூட்டத்திலும் அது இருந்து அதே காரியம் செய்யப்பட வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்.

அது நம்முடைய எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் மேலும் இருந்தது. ஒரு மனிதன் அவரிடம் வந்து, அவரைச் சந்தேகிக்கப் போன போது, இயேசு கூறினார், அவர் நாத்தான்வேல் வருவதைக் கண்டபோது, "ஓ, இதோ, ஒரு

கபடற்ற உத்தம இஸ்ரவேலன்” என்றார், வேறு வார்த்தைகளில் (சொன்னால்) ஒரு கிறிஸ்தவன், ஒரு விசுவாசி.

அவன், “நீர் என்னை எப்போது அறிவீர்?” என்றான்.

அவர், “பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ மரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்” என்றார்.





21. இப்பொழுது, அது மனதிலுள்ளதை வாசிப்பது என்றோ அல்லது-அல்லது

மனதுடன் தொடர்பு கொள்ளல் (Mental telepathy) என்றோ பிலிப்பு அதைக் குறித்துப் பேச முயற்சிக்கவில்லை, அவன் அப்படியே, "நீர் தேவனுடைய குமாரன்; நீர் இஸ்ரவேலின் ராஜா" என்றான். அவனுடைய தீர்மானத்தினிமித்தமாக அவனுடைய பெயரானது இன்றும் மனிதர்கள் மத்தியில் அழியாமல் நிலைத்திருக்கிறது. **தேவனுடைய குமாரனும், இஸ்ரவேலின் ராஜாவுமாகிய இயேசு கிறிஸ்துவுக்காக நீங்கள் உங்கள் தீர்மானத்தை செய்யும்போது, உங்கள் நாமமானது என்றென்றும் அழிவில்லாமல் நிலைத்திருக்கும்.**

பிறகு அவர் கிணற்றண்டையில் இருந்த ஸ்திரீயிடம் அவளுடைய பாவங்களைக் குறித்து கூறினபோது.

அவர் சிறிது நேரம் அவளிடம் பேசி, “போய் உன் புருஷனை அழைத்துக் கொண்டு வா” என்றார். அது தான் அது; அதுதான் அவளுடையது, அதுதான் அவளுக்குத் தடங்கலாக இருந்தது.



ஏன், ஒரு சமயம் அவர் பெரும் ஜனக்கூட்டத்தை விட்டு விட்டு, ஏதோ ஒரு வகையான வியாதியைக் கொண்டிருந்த ஒரு மனிதனை கண்டு, சுகமாக்கினதைக் குறித்து, அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது: பரிசுத்த யோவான் 5. அவர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். அவர், "மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறெதையும் தாமாய்ச் செய்ய குமாரனால் முடியாது: குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" என்றார். பரிசுத்த யோவான் 5:19. "பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்: நீங்கள்

ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் காண்பிப்பார்," 20-வது வசனம்.

22. இப்பொழுது, இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று வேதவாக்கியம் கூறுகிறது. அவர் ஒரு சுகமளிப்பவர் என்று உரிமை கோரவில்லை. அவர், "கிரியைகளை செய்வது நானல்ல; என் பிதா எனக்குள் வாசம்பண்ணி அந்த கிரியைகளை செய்கிறார்" என்றார். அவர் தாம் ஒரு மகத்தான மனிதராக இருப்பதாக உரிமை கோரவில்லை, ஆனால் அவர் எவ்வாறு இருப்பதாகத் உரிமை கோரினாரோ, அவ்வாறு தான் அவர் இருந்தார்; தேவன் அவரை நிரூபித்தார், அவர் எவ்வாறு இருப்பதாக உரிமை கோரினாரோ அவ்வாறு அவர் இருந்தார்.

சத்தியத்தைப் பேசும் ஒவ்வொரு மனிதனையும் தேவன் நிரூபிப்பார் (vindicate). மனிதன் எதையும் கூறலாம், அது அதை அவ்வண்ணமாக ஆக்கி விடாது. ஆனால் தேவன் பேசும் போது, அது அதை அவ்வண்ணமாக ஆக்குகிறது. பிதா அவருக்கு காண்பித்ததையே அப்படியே அவர் செய்ததாக அவர் கூறினார்.

வேதவாக்கியம், "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என்று கூறுகிறது, மூன்று... எபிரெயர் 13:8. அப்படியானால் இயேசு கிறிஸ்து நேற்றிருந்தது போல இன்றும் அவர் மாறாமல் இருப்பாரானால், இன்னும் அவர் நேற்று செய்த அதே கிரியைகளை இன்றும் செய்கிறார். அவர் அவ்வாறு செய்யவில்லையென்றால்,

அவர் இயேசு கிறிஸ்துவல்ல, அவர் அவ்வாறு உரிமை கோருவதில்லை.

23. அவர் இந்த கிரியைகளை எவ்விதம் செய்கிறார்? ஒரு காணக்கூடிய சரீரத்திலா? இல்லை. "இன்னும் கொஞ்சகாலத்திலே உலகம் என்னைக் காணாது; நீங்களோ என்னைக் காண்பீர்கள்: உலகத்தின் முடிவு பரியந்தமும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன், உங்களுக்குள் இருப்பேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்; இவைகளைப் பார்க்கிலும் பெரிய (அல்லது அதிகமான) கிரியைகளையும் செய்வீர்கள்" என்று எழுதப்பட்டுள்ளது.

இரவு கூட்டத்தில் அவர் அதிகமானவைகளைச் செய்கிறார், ஒரே ஒரு கூட்டத்தில், என்ன செய்ய

வேண்டும் என்று ஜனங்களிடம் கூறினவைகளிலும் மற்றவைகளிலும் அதிகமானவைகளைச் செய்கிறார், **புதிய ஏற்பாட்டில், மூன்று வருட ஊழியத்தில், ஜனங்களிடம் அவர் கூறியிருப்பவைகளைக் குறித்து எழுதப்பட்டுள்ளவைகளைக் காட்டிலும் அதிகமானவைகளை ஒரேயொரு கூட்டத்தில் செய்கிறார் (அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்)**.

நிச்சயமாகவே அவர் செய்த அநேக காரியங்கள் உண்டு, லூக்கா சுவிசேஷத்தின்படி அவைகள் பதிவு செய்யப்படவில்லை, ஆனால் எழுதப்பட்டுள்ள அக்காரியங்கள்.



ஒரு சமயம் தன்னுடைய வாயில் ஒரு பணத்தைக் (a coin) கொண்டிருக்கும் ஒரு மீன் அங்கே இருந்ததாக அவர் ஒரு மனிதனிடம் கூறினார்.



அவர்கள் ஒன்றாக கூடி வருகிற இரண்டு இடங்களில் கட்டப்பட்டிருந்த சில கழுதைகள் எங்கேயிருக்கும் என்பதை அவர்களிடம் கூறினார். தண்ணீர்குடம் சுமந்து கொண்டு வருகிற ஒரு மனிதன் எங்கிருப்பான் என்பதை அவர் அறிந்திருந்தார், ஒரு

**மேலறையை ஆயத்தம் செய்திருந்தார்.**



அவர் சொல்லியதாக பதிவு செய்து எழுதப்பட்டுள்ள சுமார் ஆறு ஏழு காரியங்கள், எல்லாமே அவர்... ஆனால் அவர் அவர்களுடைய சிந்தனைகளை

அறிந்திருந்தார்; அவர் அவர்களுடைய மனதை புரிந்துகொண்டார்.

24. **இயேசு ஜனங்களின் மனதிலுள்ளவைகளை புரிந்து கொண்டார் என்று உங்களுக்கு தெரியுமா? அவர் அவர்களின் சிந்தனைகளை அறிந்துகொண்டார். அது சரியா? அப்போது அவர்கள் எதைக்குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தனர் என்பதை அவர் அறிந்திருந்தார்.**

**இன்றிரவு நீங்கள் எதைக்குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அவர் அறிவார்.**

**அவர் இப்பொழுது இங்கே இருந்து கொண்டு, நீங்கள் எதைக்குறித்து சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை அவர் அறிகிறார்.**

**நீங்கள் எதைக்குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அவர் தம்முடைய வாய்க்கால்களின்** (channels) **வழியாக வெளிப்படுத்த முடியும்.**

பிசாசு நிச்சயமாகவே தேவன் கொண்டிருக்கும் ஒவ்வொன்றையும் குறித்த முறைகளையும் (pattern) மாதிரிகளையும் வைத்திருக்கிறான் என்பதை நாம் அறிவோம். சாத்தான் கொண்டிருக்கும் ஒவ்வொன்றும் இரண்டாந்தரமானதாகும், அவன் தேவனுடைய மாதிரிகளிலிருந்து எடுத்து வைத்திருக்கிறான் (patterned off). ஒவ்வொரு போலியான காரியமும் அசலாக உண்டாக்கப்பட்ட ஏதோவொன்றைக் கொண்டிருக்கிறது. உண்மையான அசலான டாலர் நோட்டு

முதலில் இல்லாமல் போலி டாலர் நோட்டு இருக்காது. அங்கே போலியான ஒன்று எவ்வளவு காலம் இருந்தாலும், அது எங்கோ உண்மையான ஒன்று உள்ளது என்பதை மாத்திரம் நிரூபிக்கிறது. ஆமென். உண்மையான ஒன்று, எனவே பிசாசு செய்து கொண்டிருக்கும் ஏதோவொன்றை நீங்கள் காணும்போது, தேவன் அதற்கும் மிகுந்த அளவில் மேலான ஏதோவொன்றைப் பெற்றிருக்கிறார் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள், அவன் இங்கே ஆள்மாறாட்டம் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறான். ஆனால் இயேசு, “அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்கள்” என்றார்.

25. சரி. இப்பொழுது அவருடைய ஆவி இங்கே உள்ளது. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

அவர் தம்முடைய சபையில் அசைவாடிக் கொண்டிருக்கிறார். சபையே, அதனுடன் உள்ள காரியம் என்ன என்பதை நீங்கள் அறிவீர்களா? இங்கே அதுதான் உள்ளது. நீங்கள் பரிசுத்த ஆவிக்கு விட்டுக்கொடுப்பதில்லை. நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று, "நல்லது, இவ்வளவு தான் நான் போக வேண்டியது" என்று எண்ணுகிறீர்கள். நல்லது, நீங்கள் அப்போது தேவனுக்காக அலுவலில் ஈடுபட, போக ஆயத்தமாகிறீர்கள். நீங்கள்... இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலம் பரிசுத்த ஆவியைப் பெற்று, பரிசுத்த ஆவியைப் பெறும்போது தான், அப்போது தேவனுக்காக ஊழியம் செய்ய (work) போகும் ஒரு நபராக (candidate) இருக்கிறீர்கள். அப்போது நீங்கள் போய் உங்கள் அங்கத்தினர்களை அவரிடம்

விட்டுக் கொடுப்பீர்களானால் (yielding), அவர் உங்களுக்கு என்ன செய்கிறார் என்பதைப் பாருங்கள். நீங்கள் பிரசங்கிக்கவோ, பாடவோ, சாட்சி கூறவோ, துண்டுப்பிரதிகளை கொடுக்கவோ, ஜனங்களுடன் பேசவோ, யாரோ ஒருவரை சபைக்கு அழைத்து வரவோ செய்ய வேண்டும். எல்லா வகையான வரங்களும், கிறிஸ்துவின் சரீரத்தில் உபயோகிக்கப்படுகின்றன. சிலர் ஒரு காரியத்திற்காகவும், சிலர் வேறொரு காரியத்திற்காகவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் நீங்கள் பெற்றிருப்பது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஒரு பொருட்டல்ல... நீங்கள், "நல்லது, சகோ. பிரான்ஹாமே, என்னால் செய்ய முடிந்த ஒரே காரியம் என்னவென்றால், சில ஜனங்களிடம் பேச மாத்திரம் முடியும்"

என்று கூறலாம். நல்லது, அது உங்களுக்கு மிகவும் அதிகமானதாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் அதை இயேசுவின் கரங்களில் கொடுத்து, அவர் அதைக் கொண்டு என்ன செய்கிறார் என்பதைப் பாருங்கள். சிறிய பையன்களின் கரங்களிலிருந்த சிறிய மீன்களைப் போல, அது அவனுக்கு மாத்திரம் போஷிக்கப்பட்டிருக்க முடியும். ஆனால் அவன் அதை இயேசுவின் கரத்தில் கொடுத்த போது, அது ஐயாயிரம் பேரை போஷித்தது. எனவே அது உங்களுடன் இருக்கும். நீங்கள் கொண்டிருப்பதை அவருடைய கரத்தில் கொடுங்கள்.

★★★★★

# எங்கள் நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது

(OUR HOPE IS IN GOD)

சனிக்கிழமை மாலை, செப்டம்பர் 29, 1951,
செயின்ட் நிக்கோலாஸ் அரங்கம், நியூயார்க்,
அமெரிக்கா

**இந்த முழு செய்தியையும் வாசிக்க
கீழ்க்காணும் ஐகானை கிளிக் செய்யவும்**



# இயேசு ஜனங்களின் சிந்தனைகளை அறிந்திருந்தார்



# 1

மாற்கு 14:12 பஸ்காவைப் பலியிடும் நாளாகிய புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற முதலாம் நாளிலே, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: நீர் பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே போய் ஆயத்தம்பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்.

மாற்கு 14:13 அவர் தம்முடைய சீஷரில் இரண்டு பேரை நோக்கி: நீங்கள் நகரத்திற்குள்ளே போங்கள், அங்கே

தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான், அவன் பின்னே போங்கள்;

மாற்கு 14:14 அவன் எந்த வீட்டிற்குள் பிரவேசிக்கிறானோ அந்த வீட்டு எஜமானை நீங்கள் நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கேயென்று போதகர் கேட்கிறார் என்று சொல்லுங்கள்.

மாற்கு 14:15 அவன் கம்பளம் முதலானவைகள் விரித்து ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே நமக்காக ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார்.

மாற்கு 14:16 அப்படியே, அவருடைய சீஷர் புறப்பட்டு நகரத்தில் போய், தங்களுக்கு அவர் சொன்ன படியே கண்டு, பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள்.

மாற்கு 14:17 சாயங்காலமானபோது, அவர் பன்னிருவரோடுங்கூட அவ்விடத்திற்கு வந்தார்.

★★★★★

## 2

மத்தேயு 17:24 அவர்கள் கப்பர்நகூமில் வந்த போது, வரிப்பணம் வாங்குகிறவர்கள்

பேதுருவினிடத்தில் வந்து:
உங்கள் போதகர் வரிப்பணம்
செலுத்துகிறதில்லையா என்று
கேட்டார்கள்; செலுத்துகிறார்
என்றான்.

மத்தேயு 17:25 அவன் வீட்டிற்குள்
வந்தபோது, அவன் பேசுகிறதற்கு
முன்னமே இயேசு அவனை
நோக்கி: சீமோனே, உனக்கு
எப்படித் தோன்றுகிறது? பூமியின்
ராஜாக்கள் தீர்வையையும்
வரியையும் தங்கள்
பிள்ளைகளிடத்திலோ,
அந்நியரிடத்திலோ, யாரிடத்தில்
வாங்குகிறார்கள் என்று கேட்டார்.

மத்தேயு 17:26 அதற்குப் பேதுரு:
அந்நியரிடத்தில் வாங்குகிறார்கள்
என்றான். இயேசு அவனை
நோக்கி: அப்படியானால்
பிள்ளைகள் அதைச்
செலுத்தவேண்டுவதில்லையே.

மத்தேயு 17:27 ஆகிலும், நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப் போய், தூண்டில்போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்துபார்; ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய்; அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்.

★★★★★

# 3

மத்தேயு 12:22 அப்பொழுது, பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான

ஒருவன் அவரிடத்தில்
கொண்டுவரப்பட்டான்; குருடும்
ஊமையுமானவன் பேசவுங்
காணவுந்தக்கதாக அவனைச்
சொஸ்தமாக்கினார்.

மத்தேயு 12:23 ஜனங்களெல்லாரும்
ஆச்சரியப்பட்டு: தாவீதின்
குமாரன் இவர்தானோ?
என்றார்கள்.

மத்தேயு 12:24 பரிசேயர்
அதைக்கேட்டு: இவன்
பிசாசுகளின் தலைவனாகிய
பெயெல்செபூலினாலே
பிசாசுகளைத்
துரத்துகிறானேயல்லாமல்
மற்றப்படியல்ல என்றார்கள்.

மத்தேயு 12:25 இயேசு அவர்கள்
சிந்தனைகளை அறிந்து,
அவர்களை நோக்கி: தனக்குத்
தானே விரோதமாய்ப்
பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும்

பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்கமாட்டாது.

மத்தேயு 12:26 சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?

மத்தேயு 12:27 நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்.

மத்தேயு 12:28 நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத்

துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.

★★★★★

# 4

லூக்கா 5:17 பின்பு ஒருநாள் அவர் உபதேசித்துக் கொண்டிருக்கிறபோது கலிலேயா யூதேயா நாடுகளிலுள்ள சகல கிராமங்களிலும், எருசலேம் நகரத்திலுமிருந்து வந்த பரிசேயரும் நியாயசாஸ்திரிகளும் உட்கார்ந்திருந்தார்கள்; அப்பொழுது பிணியாளிகளைக் குணமாக்கத்தக்கதாகக்

கர்த்தருடைய வல்லமை
விளங்கிற்று.

லூக்கா 5:18 அப்பொழுது சில
மனுஷர் திமிர்வாதக்காரன்
ஒருவனைப் படுக்கையோடே
எடுத்துக்கொண்டுவந்து, அவனை
உள்ளே கொண்டுபோகவும் அவர்
முன்பாக வைக்கவும்
வகைதேடினார்கள்.

லூக்கா 5:19 ஜனக்கூட்டம்
மிகுதியாயிருந்தபடியால் அவனை
உள்ளே கொண்டுபோகிறதற்கு
வகைகாணாமல், வீட்டின்மேல்
ஏறி, தட்டோடுகள் வழியாய்
ஜனங்களின் மத்தியில்
இயேசுவுக்கு முன்பாக அவனைப்
படுக்கையோடே இறக்கினார்கள்.

லூக்கா 5:20 அவர்களுடைய
விசுவாசத்தை அவர் கண்டு,
திமிர்வாதக்காரனை நோக்கி:
மனுஷனே, உன் பாவங்கள்

உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.

லூக்கா 5:21 அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் யோசனைபண்ணி, தேவதூஷணம் சொல்லுகிற இவன் யார்? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார் என்றார்கள்.

லூக்கா 5:22 இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிறதென்ன?

லூக்கா 5:23 உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?

லூக்கா 5:24 பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம்

உண்டென்பதை நீங்கள் அறியவேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 5:25 உடனே அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, தேவனை மகிமைப்படுத்தி, தன் வீட்டுக்குப் போனான்.

லூக்கா 5:26 அதினாலே எல்லாரும் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத்தினார்கள்; அல்லாமலும், அவர்கள் பயம் நிறைந்தவர்களாகி, அதிசயமான காரியங்களை இன்று கண்டோம் என்றார்கள்.

★★★★★

# 5

லூக்கா 6:6 வேறொரு ஓய்வுநாளிலே, அவர் ஜெபஆலயத்தில் பிரவேசித்து உபதேசித்தார். அங்கே சூம்பின வலதுகையையுடைய ஒரு மனுஷன் இருந்தான்.

லூக்கா 6:7 அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் குற்றம் பிடிக்கும்படி, ஓய்வுநாளில் சொஸ்தமாக்குவாரோ என்று அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்.

லூக்கா 6:8 அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து, சூம்பின கையையுடைய மனுஷனை நோக்கி: நீ எழுந்து, நடுவே நில் என்றார். அவன் எழுந்து நின்றான்.

லூக்கா 6:9 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: நான் உங்களிடத்தில் ஒன்று கேட்கிறேன்; ஓய்வுநாட்களில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ, ஜீவனைக்காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம் என்று கேட்டு,

லூக்கா 6:10 அவர்களெல்லாரையும் சுற்றிப்பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார். அப்படியே அவன் தன் கையை நீட்டினான், உடனே

அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று.

லூக்கா 6:11 அவர்களோ மூர்க்கவெறிகொண்டு, இயேசுவை என்ன செய்யலாமென்று ஒருவரோடொருவர் ஆலோசித்தார்கள்.

★★★★★



யோவான் 4:1
யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங்கொடுக்கிறாரென்று

பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது,

யோவான் 4:2 யூதேயாவைவிட்டு மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார்.

யோவான் 4:3 இயேசு தாமே ஞானஸ்நானங்கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்.

யோவான் 4:4 அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தபடியால்,

யோவான் 4:5 யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார்.

யோவான் 4:6 அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது; இயேசு பிரயாணத்தினால்

இளைப்படைந்தவராய் அந்தக்
கிணற்றினருகே உட்கார்ந்தார்;
அப்பொழுது ஏறக்குறைய
ஆறாம்மணி வேளையாயிருந்தது.

யோவான் 4:7 அவருடைய
சீஷர்கள்
போஜனபதார்த்தங்களைக்
கொள்ளும்படி ஊருக்குள்ளே
போயிருந்தார்கள்.

யோவான் 4:8 அப்பொழுது சமாரிய
நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ
தண்ணீர் மொள்ளவந்தாள்,
இயேசு அவளை நோக்கி:
தாகத்துக்குத்தா என்றார்.

யோவான் 4:9 யூதர்கள்
சமாரியருடனே
சம்பந்தங்கலவாதவர்களானபடியா
ல், சமாரியா ஸ்திரீ அவரை
நோக்கி: நீர் யூதனாயிருக்க,
சமாரியா ஸ்திரீயாகிய
என்னிடத்தில், தாகத்துக்குத்தா

என்று எப்படிக் கேட்கலாம்
என்றாள்.

யோவான் 4:10 இயேசு அவளுக்குப்
பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய
ஈவையும், தாகத்துக்குத்தா என்று
உன்னிடத்தில் கேட்கிறவர்
இன்னார் என்பதையும்
அறிந்திருந்தாயானால், நீயே
அவரிடத்தில் கேட்டிருப்பாய்,
அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக்
கொடுத்திருப்பார் என்றார்.

யோவான் 4:11 அதற்கு அந்த
ஸ்திரீ: ஆண்டவரே,
மொண்டுகொள்ள உம்மிடத்தில்
பாத்திரமில்லையே, கிணறும்
ஆழமாயிருக்கிறதே, பின்னை
எங்கேயிருந்து உமக்கு
ஜீவத்தண்ணீர் உண்டாகும்.

யோவான் 4:12 இந்தக் கிணற்றை
எங்களுக்குத் தந்த நம்முடைய
பிதாவாகிய

யாக்கோபைப்பார்க்கிலும் நீர்
பெரியவரோ? அவரும் அவர்
பிள்ளைகளும் அவர்
மிருகஜீவன்களும் இதிலே
குடித்ததுண்டே என்றாள்.

யோவான் 4:13 இயேசு அவளுக்குப்
பிரதியுத்தரமாக: இந்தத்
தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு
மறுபடியும் தாகமுண்டாகும்.

யோவான் 4:14 நான் கொடுக்கும்
தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ
ஒருக்காலும் தாகமுண்டாகாது;
நான் அவனுக்குக்கொடுக்கும்
தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய
ஜீவகாலமாய் ஊறுகிற
நீரூற்றாயிருக்கும் என்றார்.

யோவான் 4:15 அந்த ஸ்திரீ
அவரை நோக்கி: ஆண்டவரே,
எனக்குத் தாகமுண்டாகாமலும்,
நான் இங்கே மொண்டுகொள்ள
வராமலுமிருக்கும்படி அந்தத்

தண்ணீரை எனக்குத் தரவேண்டும்
என்றாள்.

யோவான் 4:16 இயேசு அவளை
நோக்கி: நீ போய், உன்
புருஷனை இங்கே அழைத்துக்
கொண்டுவா என்றார்.

யோவான் 4:17 அதற்கு அந்த
ஸ்திரீ: எனக்குப் புருஷன்
இல்லை என்றாள். இயேசு
அவளை நோக்கி: எனக்குப்
புருஷன் இல்லையென்று நீ
சொன்னது சரிதான்.

யோவான் 4:18 எப்படியெனில்,
ஐந்து புருஷர்
உனக்கிருந்தார்கள், இப்பொழுது
உனக்கிருக்கிறவன் உனக்குப்
புருஷனல்ல, இதை உள்ளபடி
சொன்னாய் என்றார்.

யோவான் 4:19 அப்பொழுது அந்த
ஸ்திரீ அவரை நோக்கி:

ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்.

யோவான் 4:20 எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே என்றாள்.

யோவான் 4:21 அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும்மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது.

யோவான் 4:22 நீங்கள் அறியாததைக் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்;

ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது..

யோவான் 4:23 உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.

யோவான் 4:24 தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.

யோவான் 4:25 அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து

என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்.

யோவான் 4:26 அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.

யோவான் 4:27 அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப்பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீரென்றாவது, ஒருவனும் கேட்கவில்லை.

யோவான் 4:28 அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி:

யோவான் 4:29 நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன்

எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள்.

யோவான் 4:30 அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.

★★★★★



யோவான் 1:35 மறுநாளிலே யோவானும் அவனுடைய சீஷரில் இரண்டுபேரும் நிற்கும் போது,

யோவான் 1:36 இயேசு நடந்துபோகிறதை அவன் கண்டு:

இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான்.

யோவான் 1:37 அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷருங்கேட்டு, இயேசுவுக்குப் பின்சென்றார்கள்.

யோவான் 1:38 இயேசு திரும்பி, அவர்கள் பின்செல்லுகிறதைக் கண்டு: என்ன தேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள்; ரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.

யோவான் 1:39 அவர்: வந்து பாருங்கள் என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள். அப்பொழுது ஏறக்குறையப் பத்துமணி வேளையாயிருந்தது.

யோவான் 1:40 யோவான்
சொன்னதைக் கேட்டு, அவருக்குப்
பின்சென்ற இரண்டுபேரில் ஒருவன்
சீமோன் பேதுருவின்
சகோதரனாகிய அந்திரேயா
என்பவன்.

யோவான் 1:41 அவன் முதலாவது
தன் சகோதரனாகிய சீமோனைக்
கண்டு: மேசியாவைக் கண்டோம்
என்று சொன்னான்; மேசியா
என்பதற்குக் கிறிஸ்து என்று
அர்த்தமாம்.

யோவான் 1:42 பின்பு, அவனை
இயேசுவினிடத்தில்
கூட்டிக்கொண்டுவந்தான். இயேசு
அவனைப் பார்த்து: நீ
யோனாவின் மகனாகிய சீமோன்,
நீ கேபா என்னப்படுவாய் என்றார்;
கேபா என்பதற்குப் பேதுரு என்று
அர்த்தமாம்.

யோவான் 1:43 மறுநாளிலே இயேசு கலிலேயாவுக்குப்போக மனதாயிருந்து, பிலிப்புவைக் கண்டு: நீ எனக்குப் பின்சென்றுவா என்றார்.

யோவான் 1:44 பிலிப்பென்பவன் அந்திரேயா பேதுரு என்பவர்களுடைய ஊராகிய பெத்சாயிதா பட்டணத்தான்.

யோவான் 1:45 பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு: நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்.

யோவான் 1:46 அதற்கு நாத்தான்வேல்: நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா என்றான்.

அதற்குப் பிலிப்பு: வந்து பார்
என்றான்.

யோவான் 1:47 இயேசு
நாத்தான்வேலைத் தம்மிடத்தில்
வரக்கண்டு அவனைக்குறித்து:
இதோ, கபடற்ற உத்தம
இஸ்ரவேலன் என்றார்.

யோவான் 1:48 அதற்கு
நாத்தான்வேல்: நீர் என்னை
எப்படி அறிவீர் என்றான். இயேசு
அவனை நோக்கி: பிலிப்பு
உன்னை
அழைக்கிறதற்குமுன்னே, நீ
அத்திமரத்தின் கீழிருக்கும்போது
உன்னைக் கண்டேன் என்றார்.

யோவான் 1:49 அதற்கு
நாத்தான்வேல்: ரபீ, நீர்
தேவனுடைய குமாரன், நீர்
இஸ்ரவேலின் ராஜா என்றான்.

யோவான் 1:50 இயேசு அவனுக்குப்
பிரதியுத்தரமாக: அத்திமரத்தின்

கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார்.

யோவான் 1:51 பின்னும் அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

★★★★★

நீங்கள்
தேவனுக்கு
செலுத்தக் கூடிய
மிகவும் உயர்ந்த
கனம், அவரை
விசுவாசிப்பதேயாம்.

**62-07-07 யேகோவா யீரே #3**

யாரையும் நியாயந்தீர்க்காதீர்கள்.
ஒவ்வொருவரையும் நேசியுங்கள்.
உங்களுடைய இருதயத்திருந்து
உங்களால் நேசிக்க
முடியவில்லையென்றால்,
அப்படியானால் கிறிஸ்து
உங்களோடு இல்லை.

பிசாசியல் – மதச் சார்பான மண்டலம், ஜுன் 9, 1953, பத்தி எண் 219

Only believe, Only believe
All things are possible,
Only believe.

சகோ. பினேகாஸ்
போன்: 8838623242,
9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in